1449
9/5/22

திரு.ஆர்.சந்திரசேகர்,பி.இ.,
தலைமைப் பொறியாளர்,

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி, சென்னை -25.

நேர்முக கடித எண். 4000/ திட்டம்/ 2018-2 நாள். 02 .05.2022

அன்புடையீர், திரு.ஆர். கிருஷ்ணசாமி.,

பொருள்: நெடுஞ்சாலைத்துறை – மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சாலைகளை மேம்பாடுத்துதல் / உறுதிப்படுத்துதல் – சில அறிவுரைகள் வழங்கியதை தொடந்து நினைவுபடுத்துதல் – இதிடர்பாக.

பார்வை: 1.அரசு தலைமை செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-09, கடித எண். 5916/ எச்.என். 2/ 2021-1 நாள்.12.05.2021

2.அரசு முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09, கடித எண். 5916/ எச்.என்.2 / 2021-2 நாள்.01.07.201

3.இவ்வலுவலகக் குறிப்பாணை எண். 4000/ திட்டம்/ 2018 நாள்.14.06.2021

4.நேர்முக கடித எண். 4000/ திட்டம்/ 2018 நாள்.29.11.2021

* * * * * *

இத்துறையின் பராமரிப்பில் உள்ள அரசு சாலைகளில், அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் அல்லது மேம்படுத்துதல் ஆகிய சாலைப்பணிகளை மேற்கொள்ளும் போது, பொது மக்கள் அதிகம் வசிக்கும் நகர பகுதிகளில் அதாவது மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு உட்பட்ட இடங்களில் அரசு தலைமை செயலாளர், அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஏற்கனவே உள்ள சாலை மட்டத்தினை உயர்த்தாமல் புதியதாக போடப்படும் தார்தளத்தின் அளவுக்கு (BC) ஏற்ப சாலையின் மேற்பரப்பை சுரண்டி எடுத்துவிட்ட (Milling) பின்னரே போட வேண்டும் என ஏற்கனவே பார்வை 3ல் காணும் இவ்வலுவலகக் குறிப்பாணையில் தெளிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், பார்வை 4ல் காணும் நேர்முக கடிதத்தின் மூலமாக, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலை பகுதிகளில் மேம்பாடு

கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டும் மற்றும் அங்கீகாரம் வழங்க வேண்டும், என்றும் தங்களை மீண்டும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதம் கிடைத்தமைக்கான ஒப்புதல் கடிதம் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

21.05.22

(ஆர்.சந்திரசேகர்)

பெறுநர்

முனைவர். ஆர். கிருஷ்ணசாமி எம்.இ, பி,எச்.டி.,
அணைத்து கண்காணிப்பு பொறியாளர்களுக்கு
கண்காணிப்புப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நெடுஞ்சாலைத்துறை,
திருச்சி

அல்லது உறுதிப்படுத்துதல் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் போதும் மற்றும் அங்கீகாரம் வழங்கும் போதும், மேலே குறிப்பிட்டுள்ள அரசு வழிகாட்டுத்தலின் படி சாலையின் மட்டம் உயர்த்தப்படாதவாறு கவனத்தில் கொள்ளுமாறும் தங்களை அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மீண்டும் தங்களுக்கு நினைவூட்டும் வகையில் அரசு வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கீழே வழங்கி அதைத் தவறாது பின்பற்றுமாறும் தங்களை அன்புடன் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

- மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகளின் மேற்தளம் ஏற்கனவே போதுமான கனத்துடன் (Crust) கட்டமைக்கப்பட்டுள்ளதால் பி.பி.டி (Benkle Beam Deflexion) சோதனை மேற்கொள்ள வேண்டியதில்லை. இந்திய சாலை காங்கிரஸ்ன் (IRC) வழிகாட்டுதலின் படி போதிய சாலையின் கனம் (Crust Thickness) இல்லாத பட்சத்தில் அருகில் உள்ள கட்டுமானங்களின் பிளிந்த் அளவை விட சாலையை உயர்த்தாமல் சாலைத் தளத்தின் அளவை நிர்ணயம் செய்ய வேண்டும்.
- நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் அமைக்கப்படும் வடிகால் மேல் மட்டத்தை விட சாலையின் அளவு கூடுதல் கூடாது.
- சாலைகளின் மேற்தள கட்டுமானத்தை மட்டும் தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் இடவேண்டும். இது வீடுகளுக்குள் நீர் புகுவதைத் தடுக்கும்.
- மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகளில் தார் மேற்தளத்திற்கு (BC) மட்டுமே அனுமதி அளிக்கப்படும்.
- சாலை தார் மேற்தள கனமானது (Thickness of BC), இந்திய சாலை காங்கிரஸ் (IRC) விதி 37-2018ன் படி சாலையின் போக்குவரத்து செறிவுக்கேற்ப மாறுபடும்

மேலே குறிப்பிட்டுள்ள அரசு வழிகாட்டுத்தலின் படி மாநகர, நகர மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சாலையின் மட்டம் உயர்த்தப்படாதவாறு கவனத்தில்